2014 ஜூலை 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 276, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

276—

புதிய பேருந்து

***37322—திருமதி ச. முத்துசெல்வி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரன்கோவிலிலிருந்து கோழிக்கோடு வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக தடம் எண் 284-ல் செங்கோட்டையிலிருந்து கோழிக்கோடுக்கு இயங்கி வந்த இரண்டு பேருந்துகள், சங்கரன்கோவில் பகுதி மக்கள் நலன் கருதி, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க சங்கரன்கோவில் வழியாக 3-3-2014 முதல் இயக்கப்பட்டு வருகிறது. மேலும், சங்கரன்கோவிலிலிருந்து கோழிக்கோடுக்கு முன்பதிவு செய்து பயணம் மேற்கொள்ள வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி. ச. முத்துசெல்வி அவர்கள்.

திருமதி ச. முத்துசெல்வி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா என்னும் மூன்றெழுத்து மந்திரத்தைக் கொண்டு, தமிழக மக்களுக்கு விதி 110-ன்கீழ் தரும் திட்டங்கள் ஏராளம், தாராளம். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திட்டங்களை அடுக்கி, அடுக்கி வைத்தால், இமயம் கூடக் குட்டையாகும், பூமிகூடத் தட்டையாகும். 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறோம்', அது அண்ணா அவர்களின் வாக்கு. இன்று தமிழக மக்களின் சிரிப்பில் புரட்சித் தலைவி அம்மா அவர்களைக்

கண்டுகொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுக்காக நான், மக்களால் நான் என்று வாழும் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டுப் பணிவுடன் வணங்கி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைப்படி, சங்கரன்கோவிலிலிருந்து கோழிக்கோடுக்குப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. அதற்காகப் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைக் கூறிக்கொள்கிறேன். மேலும், சங்கரன்கோவிலிலிருந்து பேருந்தை இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவோடு, இரண்டு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அந்த இரண்டு பேருந்துகளிலும் பயணிகளின் எண்ணிக்கை 86.92 சதவிகிதம் மட்டுமே இருக்கிறது. பயணிகளுடைய எண்ணிக்கை அதிகரிக்கும்போது, இரண்டு மாநிலங்களுடைய ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, அதற்குரிய ஆய்வுகள் செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.

திருமதி ச. முத்துசெல்வி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவிலிலிருந்து கோழிக்கோடுக்கு பேருந்து வசதி வேண்டுமென்று அங்குள்ள மக்கள் நீண்ட காலமாகக் கோரிக்கை வைத்து வருகின்றனர். அதைப்போல, சங்கரன்கோவிலிலிருந்து கூடலூருக்கு கோயம்புத்தூர் வழியாக பேருந்து இயக்க வேண்டும் என்பதும் அங்குள்ள மக்களுடைய நீண்டநாள் கோரிக்கை. இந்த இரண்டு பேருந்துகளும்

செங்கோட்டையிலிருந்து பல பகுதிகளுக்குச் சென்று வருகின்றன. ஆனால், அந்தப் பேருந்துகள் சங்கரன்கோவிலிலிருந்து செல்ல வேண்டும் என்பது அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கை. எனவே, வருங்காலத்தில் சங்கரன்கோவிலிலிருந்து பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதிக்குட்பட்ட ஓதியடிகாடு, பத்தனங்காடு ஆகிய கிராமங்களுக்கு பேருந்து வசதி இல்லையென்று, இந்த ஆட்சி அமைந்தபோது, முதல் கூட்டத்திலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டிருந்தேன். 'விரைவிலே ஆவன செய்வோம்' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி அளித்திருந்தார்கள். ஆனால், இதுவரை அந்தப் பேருந்து வசதி ஏற்படுத்தப்படவில்லை. எனவே, மறு ஆய்வு செய்து, அந்தப் பகுதிக்கு பேருந்து வசதி ஏற்படுத்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களுடைய தேவைகளை அறிந்து, தஞ்சாவூர் மாவட்டத்திற்கு மட்டும், மூன்றாண்டுகளில் 44 புதிய வழித்தடங்களை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மக்களுடைய பயன்பாட்டுக்காக வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய வழித்தடங்கள் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வு செய்யப்பட்டபோது, அந்த வழித்தடங்களில் பயணிகளுடைய எண்ணிக்கை அதிகமாக இல்லை; மிகக் குறைவாக இருந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்திக் கூறுவதன் காரணமாக, மாண்புமிகு அம்மா

அவர்களுடைய உத்தரவைப் பெற்று, அந்த வழித்தடம் மீண்டும் ஆய்வு செய்யப்படும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, பயணிகளுடைய எண்ணிக்கைக்கேற்ப, அந்த வழித்தடங்களில் பேருந்து இயக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 277, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

277—

நவீன மின் தகன மேடை

***9708—திரு. அ. கணேஷ்குமார்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி பேரூராட்சியில் நவீன மின் தகன மேடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) செஞ்சி பேரூராட்சியில் மொத்தமுள்ள எட்டு இடுகாடு மற்றும் சுடுகாடுகளுள், மூன்று சுடுகாடுகளை இந்துக்களும், மூன்று இடுகாடுகளை முஸ்லிம் இனத்தவரும், இரண்டு இடுகாடுகளை கிறிஸ்தவர்களும் பயன்படுத்தி வருகின்றனர். செஞ்சி பேரூராட்சியில் போதிய இடவசதி இல்லாத காரணத்தினால், நவீன மின் மயானம் அமைக்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.